# தமிழ்த்துறை

# இளநிலைப் பட்டவகுப்பு

# பிறதுறை விருப்பப்பாடம்:

# தமிழ் இலக்கிய வரலாறு

**பாட ஆசிரியர்: மோ. செந்தில்குமார்**

## அலகு 2:

## பாடப்பகுதி

1. எட்டுத்தொகை நூல்கள்
2. பத்துப்பாட்டு நூல்கள்
3. சங்க இலக்கியத்தின் மாண்புகள்
4. முத்தொள்ளாயிரம்

5

# எட்டுத்தொகை நூல்கள்

தமிழிலுள்ள நூல்களுள் மிகப் பழமை வாய்ந்தவை சங்க இலக்கியங்களாகும். ஏறத்தாழ கி.மு.500 முதல் கி.பி. 200 வரையில் விளங்கிய கடைச் சங்கப் புலவர்களால் ஆயிரக்கணக்கான பாடல்கள் பாடப்பெற்றன. அப்பாடல்கள் முழுதும் கிடைக்கவில்லை. நாட்டின் மூலை முடுக்குகளில் ஒதுங்கியிருந்து, கேட்பாரற்றுக் காவிரி வெள்ளத்திலும் வையைப் பெருக்கிலும் பொருநை ஆற்றிலும் வீசப்பெற்று பல பாடல்கள் அழிந்தன. கரையானும் தீயும் பல பாடல்களை உண்டன. நல்லறிஞர் சிலர் எஞ்சியிருந்த பாடல்களைத் திரட்டித் தொகுத்தனர். இம்முயற்சியில் ஈடுபட்ட அத்தமிழ்க் காவலர்களுக்கு வேந்தரும் வேளிருமாய புரவலர் ஊக்கமூட்டிப் போற்றினர். திரட்டப்பட்ட பாட்டுக்களுள் சிறந்த பாட்டுக்களை மட்டும் பொருள் நோக்கியும் செய்யுள் நோக்கியும் அடிவரையறை கருதியும் வகுத்து அவற்றை எட்டுத் தொகுதிகளாகத் தொகுத்தனர். இவற்றைப் பழைய உரையாசிரியர்கள் 'தொகை', என்றும், 'எண் பெருந்தொகை' என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

## எட்டுத்தொகை நூல்கள்

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்ற எட்டும் எட்டுத் தொகையுள் அடங்கும். இதனை,

**"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று**
**இத்திறத்த எட்டுத் தொகை"**

என்ற பாடலால் அறியலாம்.

இவ்வெட்டு நூல்களுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகிய ஐந்து நூல்களும் அகப்பொருள் பற்றியன. பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறப்பொருள் பற்றியன. பரிபாடல் என்பது அகப்பொருள் புறப்பொருள் இரண்டும் கலந்து வரும் நூலாகும். இவ்வெட்டு நூல்களிலும் அமைந்துள்ள பாடல்களை நானூற்றுக்கும் மேற்பட்ட புலவர்கள் பாடியுள்ளனர். பெண்பாற் புலவர் களும் அரசகுடும்பத்தைச்சார்ந்தோரும்பல பாடல்களைஇயற்றியுள்ளனர்.

இவ்வெட்டு நூல்களுள் பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை என்ற நூல்களைத் தவிர ஏனைய நூல்களுக்குப் பாரதம் பாடிய பெருந் தேவனார் என்பவர் கடவுள் வாழ்த்துப்பாடல் இயற்றிச் சேர்த்துள்ளார். இவர் வாழ்ந்த காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டாகும்.

## எட்டுத்தொகையில் அகநூல்கள்

### நற்றிணை

இந்நூல் ஒன்பது முதல் பன்னிரண்டு அடிவரையுள்ள 400 அகவற் பாக்களின் தொகுதியாகும். நற்றிணை என்பது நல்ல திணை எனப்படு கிறது. திணை என்பது சொல்லாகு பெயராய் அகத்திணை நூலைக் குறிக் கிறது. சிறிய பாடல்களுமின்றிப் பெரிய பாடல்களுமின்றி அளவான பாடல்களைப் பெற்றமையால் இத்திணை நல் என்னும் அடைமொழி பெற்று நற்றிணையாயிற்று என்பர். இந்நூலில் கடவுள் வாழ்த்து நீங்கலாக 400 பாடல்கள் உள்ளமையால் இது நற்றிணை நானூறு எனவும் வழங்கப் படுகிறது. 175 புலவர்களால் பாடப்பெற்ற இந்நூலைத் தொகுப்பித்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி என்பவன் ஆவான். தொகுத்தவர் பெயர் பாட்டில் இல்லை. இந்நூலிற்கு கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். 1914இல் நற்றிணையை உரை எழுதிப் பதிப்பித்தவர் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர்.

நற்றிணையில் அகச்சுவை நிரம்பிய பாடல்களில் மக்கள் அறவாழ்வு, மன்னர் கொடை, ஆட்சித்திறம், ஒருமைப்பாடு, பழந்தமிழர் பழக்க வழக்கங்கள், உவமைத்திறம், உள்ளுறை, இறைச்சிப் பொருள்களின் அமைப்பு முதலியவை காணப்படுகின்றன. நற்றிணையைப் பாடிய புலவர்களில் சிலர் தாங்கள் பாடிய பாடல்களின் பாவடித் தொடர்களாலே பெயர் பெற்றுள்ளமை சிறப்புக்குரியது. சான்றாக, தேய்புரிப் பழங்கயிற்றினார், மடல் பாடிய மாதங்கீரனார், விழிகட்பேதைப்

பெருங்கண்ணனார் முதலியோரைக் குறிப்பிடலாம். திருக்குறள் கருத்துக்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்ட இந்நூல், சார்ந்திருப்பவர் துன்பத்தைத் துடைப்பதையே அக்காலச் சான்றோர் பெரும் செல்வமாகக் கருதினர் என்பதை,

**"சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்**
**புன்கண் அஞ்சும் பண்பின்**
**மென்கட் செல்வம் செல்வம் என்பதுவே"**

என்ற பாடல் மூலமாக அறியலாம்.

## குறுந்தொகை

பூரிக்கோ என்பவரால் தொகுக்கப்பட்ட இந்நூல் நான்கடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் கொண்ட நானூறு பாடல்களின் தொகுதியாகும். இது நல்ல குறுந்தொகை எனவும் அழைக்கப்படுகிறது. நல்ல என்னும் அடைமொழி இந்நூலின் சிறப்பை அறிவிக்கிறது. எட்டுத்தொகை நூலில் முதலாவதாகத் தொகுக்கப்பட்ட இந்நூலுக்குக் குறுந்தொகை நானூறு என்றும் பெயர் இருந்தமையை இறையனார் களவியல் உரையால் அறியலாம்.

இந்நூலுக்குப் பாரதம் பாடிய பெருந்தேவனார் முருகனைப் பற்றிய பாடல் ஒன்றைக் கடவுள் வாழ்த்தாகப் பாடியுள்ளார். இக்கடவுள் வாழ்த்துப் பாடல் இல்லாமல் இந்நூலில் 401 பாடல்கள் உள்ளன. 307, 391 ஆகிய இரு பாடல்களும் குறுந்தொகையின் பேரெல்லையை மீறி ஒன்பது அடிகள் பெற்றுள்ளன. 391-ஆம் பாடல் சில பாட பேதங்களுடன் எட்டடியாகச் சில ஏடுகளில் எழுதப்பட்டுள்ளது. 307-ஆம் பாடல் எல்லா ஏடுகளிலும் ஒன்பது அடி கொண்டதாகவே அமைந்துள்ளது. எனவே இப்பாடலை நீக்கினால் குறுந்தொகை 400 என்னும் பெயர் பொருத்தமாகும் என்பார் தெ.ஞானசுந்தரம்.

இந்நூலின் முதல் 300 பாடல்களுக்குப் பேராசிரியரும் பின் 20 பாடல்களுக்கு நச்சரும் உரை எழுதியதாகத் தெரிகிறது. ஆனால் உரைகள் கிடைக்கவில்லை. தற்போது நூல் முழுமைக்கும் உ.வே. சாமிநாத ஐயர் எழுதியுள்ள உரை கிடைக்கிறது. குறுந்தொகையை முதலில் 1925இல் வெளியிட்டவர் தி.சௌ. அரங்கசாமி ஐயங்கார். பின்பு 193.-இல் இதை தமதுரையுடன் சிறந்த பதிப்பாக வெளியிட்டார் உ.வே.சா.

இந்நூலில் காணப்படும் சிறப்புகளாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

- உரையாசிரியர்களால் மிக அதிகமான மேற்கோள் பாடல்கள் எடுத்தாளப்பட்டுள்ள பெருமை குறுந்தொகையைச் சாரும்.
- நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நற்கனகக் கிழியைத் தருமிக்கு அருளிய வரலாற்றுக்கு அடிப்படையாக அமைந்த கொங்குதேர் வாழ்க்கைப் பாடல் இந்நூலின் இரண்டாம் பாடலாக அமைந்துள்ளது.
- இந்நூலின் பரணர் பாடிய பாடல்கள் பல வரலாற்றுக் குறிப்புகளைத் தெரிவிக்கின்றன.
- குறுந்தொகைப் புலவர்களில் பதினெட்டுப் புலவர்கள் தங்கள் பாடல்களில் அமைந்த உவமையைக் கொண்டோ அல்லது சிறந்த தொடரைக் கொண்டோ பெயர் பெற்றுள்ளனர்.
- அரிசில் கிழார், அள்ளூர் நன்முல்லையார், கூடலூர் கிழார், மதுரை நல்வெள்ளியார் முதலிய புலவர்கள் அவர்களுடைய ஊர்ப்பெயரோடு சேர்த்து வழங்கப்பட்டவர் ஆவர்.
- கொல்லன் அழிசி, ஆசிரியன் பெருங்கண்ணனார், செய்தி வள்ளுவன் பெருஞ்சாத்தனார் முதலியோர் அவரவர் தொழில் பெயரோடு சேர்த்து வழங்கப்பட்டனர்.
- குறுந்தொகைப் பாடல்களைப் பாடிய புலவர்களில் அள்ளூர் நன் முல்லையார், ஆதிமந்தியார், ஊண்பித்தை, ஒக்கூர் மாசாத்தியார், ஔவையார், கச்சிப்பேட்டு நன்னாகையார், காக்கைபாடினியார், நச்செள்ளையார், பூங்கணுத்திரையார், வருமுலையார்த்தி, வெள்ளிவீதியார் ஆகியோர் பெண்பாற் புலவர்கள் ஆவர்.

முன்பின் தெரியாத ஆணும் பெண்ணும் முதன்முறையாகக் கண்டதும் காதல் கொண்டு விடுகின்றனர். அன்பு உள்ளங்கள் இரண்டறக் கலந்த கலப்பினை,

"யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக்கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"

என்று விளக்குகிறது இக்குறுந்தொகைப் பாடல்.

## ஐங்குறுநூறு

ஐந்திணைகளில் ஒவ்வொன்றும் குறைந்த அடிகளைக் கொண்ட நூறு நூறு பாடல்களைக் கொண்டு இந்நூல் இயங்குவதால் ஐங்குறுநூறு எனப்பெயர் பெற்றது. இதன் பாடல்கள் 3 அடிச் சிற்றெல்லையும் 6 அடிப் பேரெல்லையும் கொண்டவை. இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.

தனிப்பாடல் மூலம் மருதத்திணைப் பாடல்களை ஓரம்போகியாரும், நெய்தல் திணைப் பாடல்களை அம்மூவனாரும், குறிஞ்சித் திணைப் பாடல்களைக் கபிலரும், பாலைத் திணைப் பாடல்களை ஓதலாந்தையும், முல்லைத்திணைப் பாடல்களைப் பேயனாரும் முறையே 100 பாடல்களாகப் பாடியுள்ளனர் என்பது தெரிகிறது.

அழகும் செறிவும் நிறைந்த இந்நூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் என்ற புலவராவார். தொகுப்பித்தோன் யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்ற சேர அரசன். இவ்விருவரும் சிறந்த நட்பினர். இம்மன்னனுடைய தூண்டுதலே இந்நூல் உருவாகக் காரணமாயிற்று எனலாம். இந்நூலில் 129, 130- ஆம் பாடல்கள் மறைந்து போயின. 416, 480 ஆம் பாடல்களின் இரண்டாம் அடிகளில் சீர்கள் குறைந்து காணப்படுகின்றன. ஒவ்வொரு பாடலின் கீழும் தரப்பட்டுள்ள கருத்துக்கள் பழைமையானவையே.

நூறு பாடல்களின் பகுதிகளான பத்துக்கள் ஒவ்வொன்றும் தனித் தனியான கட்டுக்கோப்புப் பெற்றவை. இவை பொருள் அமைப்பினால் அல்லது பத்துப்பாவிலும் பயின்று வரும் சொல்லாட்சியினால் தனித் தனிப் பெயர்கள் பெற்றுள்ளன. வேட்கைப் பத்து, வேழப்பத்து, கள்வன் பத்து முதலியன சொல்லாட்சியினால் பெயர் பெற்றவை. கிழத்தி கூற்றுப்பத்து, செவிலி கூற்றுப்பத்து, தோழி கூற்றுப்பத்து முதலியன பொருளமைப்பால் பெயர் பெற்றன. இவற்றில் நொண்டிப்பத்து அந்தாதி முறையில் அமைந்துள்ளது.

> **"நெல்பல பொலிக பொன்பெரிது சிறக்க**
> **விளைக வயலே வருக இரவலர்**
> **பகைவர் புல்ஆர்க பார்ப்பார் ஓதுக**
> **பசி இல்லாகுக பிணி சேண் நீங்குக**
> **வேந்து பகை தணிக யாண்டுபல நந்துக"**

என்பன போன்ற வாழ்வியலுக்கும் உலகியலுக்கும் இயைந்த பல நல்ல கருத்துக்களை இந்நூலில் காண முடிகிறது.

## கலித்தொகை

மற்ற தொகை நூல்கள், அகவற்பாவால் இயன்ற பாட்டுக்களின் தொகுப்பாக விளங்க, கலித்தொகையோ ஓசை இனிமையையும், தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்ற சிறப்பான அமைப்பையும் கொண்ட கலிப்பாக்களின் தொகுப்பாகத் திகழ்கிறது. இதில் அமைந்த பாலைக்கலியைப் பெருங்கடுங்கோவும், குறிஞ்சிக்கலியைக் கபிலர் பெருமானும், மருதக்கலியை மருதனிள நாகனாரும், முல்லைக்கலியைச் சோழன் நல்லுருத்திரனும், நெய்தற்கலியை நல்லந்துவனாருமாக மொத்தம் 149 பாடல்களை இயற்றியுள்ளனர். இந்நூல் முழுமைக்கும் நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார்.

கலித்தொகையின் ஒவ்வொரு பாடலின் கீழும் அவ்வப்பாடலுக் குரிய கூற்று விளக்கம் பற்றிய பழைய குறிப்பு உள்ளது. மற்ற தொகை நூல்கள் அன்பின் ஐந்திணையை மட்டுமே பாடுகின்றன. அன்பின் ஐந்திணையுடன் கைக்கிளையையும், பெருந்திணையையும் காட்டுவது கலித்தொகை மட்டுமே. பல வழக்குச் சொற்களையும் இதனுள் காணலாம். கலித்தொகையின் எந்தப்பாடலைப் படிக்கும் போதும் ஓர் உயர்ந்த ஓரங்க நாடகத்தைச் சுவைத்த உணர்வைப் பெறுவது உண்மை. மேலும்,

**"பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்**
**அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை**
**அறிவெனப் படுவது பேதையார் சொல்நோன்றல்**
**செறிவெனப் படுவது கூறியது மறாஅமை**
**நிறைவெனப் படுவது மறைபிற ரறியாமை..."**

என்றவாறு மனித வாழ்க்கையின் அன்பு, பண்பு, அறிவு, செறிவு பற்றிய விளக்கங்களை இந்நூலில் காண முடிகிறது.

## அகநானூறு

நீண்ட அகவற்பாக்களால் இயன்றது இத்தொகை நூல். இப்பாடல்கள் 13 அடிச் சிறுமையும் 31 அடிப் பெருமையும் உடையவை. இதனை நெடுந்தொகை எனவும் வழங்குவர். மேலும் அகம், அகப்பாட்டு என்னும் பெயர்களாலும் உரையாசிரியர்கள் இத்தொகை நூலைக் குறிப்பர். எட்டுத்தொகை நூல்களுள் அகம் என்னும் பெயரை இத்தொகை நூல் பெற்றிருப்பது இதன் சிறப்பு நோக்கியே ஆகும்.

அகநானூற்றைத் தொகுத்தவர் மதுரை உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திரசன்மர். தொகுப்பித்தவர் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி. இத்தொகை நூலைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 145.

இந்நூலின் பாகுபாடு ஒரு தனிச்சிறப்புடையது. முதல் 120 பாக்களைச் செருக்குற்றுச் செம்மாந்து செல்லும் 'களிற்றியானை நிரை' எனவும், 121-300 வரையுள்ள பாக்களை, மணியும் பவளமும் கலந்தாற் போன்று காட்சி தரும் 'மணிமிடை பவளம்' எனவும், 301-400 முடிய அமைந்த பாக்களை நன்முத்தின் ஒளிபோன்று பொருட்சிறப்புடைய 'நித்திலக் கோவை' எனவும் மூவகையாகப் பாகுபாடு செய்துள்ளனர்.

ஐந்திணைகளையும் எளிதாகக் கண்டுபிடிக்க ஒற்றை எண்ணால் (1, 3, 5, 7...) முடியும் பாக்களைப் பாலைத்திணை எனவும், இரண்டு, எட்டு என்ற எண்களை (2,8, 12, 18...) இறுதியாகக் கொண்டவற்றைக் குறிஞ்சித் திணை எனவும், நான்கு என்ற எண்ணோடு (4, 14, 24...) முடிவதை முல்லைத்திணை எனவும், ஆறு என்ற எண்ணோடு (6, 16, 26, 36...) முடிவதை மருதம் எனவும் பத்தோடு (10, 20, 30...) முடிவதை நெய்தல் திணை எனவும் செய்யுட்களைப் பாகுபாடு செய்துள்ளனர். இதில் மிகுதியான பாக்கள் பாலைத் திணையிலேயே அமைந்துள்ளன.

இந்நூலில் அகப்பொருளின் நயத்தை உணர்வதோடு பண்டைத் தமிழக வரலாற்றுச் செய்திகள் பலவற்றையும் அறியலாம். சான்றாக,

**"பல்புகழ் நிறைந்த வேல்போர் வேந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதல் கரந்த நிதியங் கொல்லோ?"**

என்ற பாடலில் வடபுல வரலாற்றுக் குறிப்பு காணப்படுகிறது. மேலும் பண்டைத் தமிழரின் திருமண முறைகளைச் செவ்விதின் விளக்கும் பாடலும் இதில் உள்ளது.

அகப்பாடலின் உரிப்பொருள், அதை ஆற்றலுடன் உணர்த்தும் பாங்கு, எழுந்த காலத்தை உள்ளடக்கிக் காலம் கடந்து வாழும் பெற்றி ஆகியவற்றிற்கு அகநானூறு ஒரு சிறந்த இலக்கியமாகத் திகழ்கிறது.

## எட்டுத் தொகையில் புறநூல்கள்

### பதிற்றுப்பத்து

பதிற்றுப்பத்து, புறநானூறு இரண்டுமே அகவற்பாக்களால் ஆனவை என்றாலும் இரண்டிற்கும் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. முடிமன்னர் மூவரை மட்டுமின்றிக் குறுநில மன்னர் பலரையும் பாடிய

பாடல்களின் தொகுதியே புறநானூறு. பதிற்றுப்பத்தோ சேர மன்னர் களைப் பற்றிய பாடல்களின் தொகுதி. புறநானூற்றுப் பாடல்கள் பல அரசரைப் பாடினாலும் அவை கால வரிசைப்படி தொகுக்கப்பட்டுள்ளது. பத்து சேர மன்னர்களைப் பத்துப் புலவர்கள் பத்துப் பத்தாகப் பாடிய பத்துப் பாக்களின் தொகுதியாதலின் இந்நூல் பதிற்றுப்பத்து என்று பெயர் பெறுவதாயிற்று. பதிற்றுப்பத்து என்பதற்குப் பத்துப்பத்து என்பதே பொருளாகும். பதிற்றுப்பத்து ஒரு தொகை நூலாகக் கருதப்பட்டாலும் இதனைப் பத்து தனித்தனி நூல்களாகக் கொள்வதில் தவறில்லை. எனவே முதற்பத்து, இரண்டாம் பத்து, மூன்றாம் பத்து என்று ஒவ்வொரு தனி நூலாகக் குறிப்பிடப்படுவது வழக்கமாயிற்று. இந்நூலைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் பற்றிய செய்தி யாதும் அறியப்படவில்லை.

இந்நூலின் முதற் பத்தும் இறுதிப்பத்தும் இன்று கிடைக்கவில்லை. எஞ்சிய பத்துக்களில் இரண்டாம் பத்தில் குமட்டூர் கண்ணனார் இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பாடியுள்ளார். மூன்றாம் பத்தில் பாலைக் கௌதமனார் பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பாடியுள்ளார். நான்காம் பத்தில் காப்பியாற்றுக் காப்பியனார் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலைப் பாடியுள்ளார். ஐந்தாம் பத்தில் பரணர், கடல் பிறக் கோட்டிய செங்குட்டுவனைப் பாடியுள்ளார். ஆறாம் பத்தில் காக்கை பாடினியார் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப் பாடியுள்ளார். ஏழாம் பத்தில் கபிலர் செல்வக்கடுங்கோ வாழியாதனைப் பாடியுள்ளார். எட்டாம் பத்தில் அரிசில்கிழார் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும் பொறையைப் பாடியுள்ளார். ஒன்பதாம் பத்தில் பெருங்குன்றூர்க்கிழார் இளஞ்சேரலிரும் பொறையைப் பாடியுள்ளார்.

ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் துறை, வண்ணம், தூக்கு, பெயர் என்பவற்றைக் காட்டும் குறிப்புகள் உள்ளன. அவ்வப்பாட்டில் அமைந்த சிறந்ததொரு தொடரே பாட்டின் தலைப்பாக அமைக்கப்பட்டுள்ளது. இவை நூலாசிரியராலோ தொகுத்தவராலோ தரப்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் ஆசிரியர் பெயர், அதன் பாட்டுடைத்தலைவர், அவர் இயற்றிய அரிய செயல்கள், ஆசிரியருக்கு அவர் அளித்த பரிசில், முதலிய செய்திகளைக் குறிப்பிடும் பதிகம் உள்ளது. இப்பதிகங்கள் ஆசிரியப்பாவில் தொடங்கிக் கட்டுரையாக முடிவுறுகின்றன. இவை சாசனங்களில் காணப்படும் மெய்கீர்த்திகளைப் போன்று அமைந்துள்ளன.

"பகுத்தூண் தொகுத்த ஆண்மை
பிறர்க்கென வாழ்திநீ ஆகல் மாறே"

என்பதால் "பலருக்கும் பகுத்தளிப்பதற்கே செல்வத்தைத் தொகுத்து வைக்க வேண்டும். பிறர் நலத்தைப் பேணுவதற்காகவே வாழ்தல் வேண்டும்" என்பனவாகிய வாழ்வியல் அறங்கள் இந்நூலில் கூறப் படுகின்றமை புலானகின்றது. இந்நூலுக்குப் பழைய உரை ஒன்று உள்ளது. உரையாசிரியரைப் பற்றிய குறிப்புகள் இல்லை.

## புறநானூறு

பாரதம் பாடிய பெருந்தேவனாரின் சிவனைப் பற்றிய கடவுள் வாழ்த்துச் செய்யுளுடன், முரஞ்சியூர் முடிநாகராயர் தொடங்கிக் கோவூர்கிழார் இறுதியாகப் பல்வேறு புலவர்கள் பாடியுள்ள 400 பாடல்களின் தொகுப்பே புறநானூறு ஆகும். அகவற்பாக்களால் அமைந்த நூல் இது. இந்நூலைத் தொகுத்தவர் பெயரும் தொகுப்பித்தோர் பெயரும் தெரியவில்லை. பாக்களில் அமைந்துள்ள அடிகளின் சிறுமை பெருமை எல்லைகளும் தெரியவில்லை. இதற்குப் புறம், புறப்பாட்டு என்னும் வேறு பெயர்களும் உண்டு.

இந்நூலில் 267, 268 இருபாடல்கள் முழுமையாகக் கிடைக்க வில்லை. 328, 370 ஆகிய பாடல்களில் முதல் பகுதி இல்லை. 244, 355, 361 பாடல்களில் பிற்பகுதி காணப்படவில்லை. மற்றும் நாற்பது பாடல்களில் இடையில் சில பகுதிகள் சிதைந்து உள்ளன. இந்தச் சிதைந்த பகுதிகள் புள்ளிநிரை இட்டுக் காட்டப்பெற்றுள்ளன.

இந்நூலில் கபிலர், பரணர் போன்றோர் இயற்பெயரோடு விளங்கினாலும், எஞ்சிய புலவர்கள் ஊராலும், உறுப்பாலும், தொழிலாலும், மரபாலும், தந்தை பெயர் அடுத்தும் பெயர் பெற்றுள்ளனர். அகப்பாடல்களைப் போல் இரும்பிடர்த்தலையார், தொடித்தலை விழுத்தண்டினார் போன்றோர்தாம் பாடிய பாடல்களில் விளங்கும் தொடர்களால் அழைக்கப்பட்டுள்ளனர்.

வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை ஆகிய புறப் பொருள் கருத்துக்களைத் தழுவி அமைந்த செய்யுட்களை கொண்ட இந்நூல் பண்டைத் தமிழகத்தின் அரசியல் வரலாற்றையும் சமூக வரலாற்றையும் அறிவுறுத்தும் அரிய கருவூலமாகக் காணப்படுகிறது. பண்டைக்காலத்தில் வாழ்ந்த பேரரசர்கள், சிற்றரசர்கள், வீரர்கள் பற்றிய

செய்திகளையும், வீரவழிபாட்டு முறைகள், சமூகப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றையும் எடுத்தியம்பும் பாடல்களை இத்தொகுதி ஒன்றில்தான் நாம் காண முடியும். புறநானூறு தோன்றிய காலத்தைத் தமிழகத்தின் வீரயுகம் என்றும், தமிழகத்தின் பொற்காலம் என்றும் கூறலாம். தொல்காப்பியப் புறத்திணையினின்றும் இதன் துறைகள் பெரிதும் மாறுபடுகின்றன.

புறநானூற்றுப் பாடல்கள் ஒருவகை இயைபு கருதி முறைப்படுத்தப் பட்டுள்ளன. முதலில் முடிமன்னர் மூவரைப் பற்றிய பாடல்களும், பின்னர் குறுநில மன்னர், வேளிர் முதலிய சிறப்புடைய மாந்தர் பற்றிய பாடல்களும், போர்ப் பாடல்களும், கையறு நிலை, நடுகல், மகளிர் தீப்பாய்தல் முதலிய போர் நிகழ்ச்சியுடன் தொடர்புடைய பாடல்களும் அமைந்துள்ளன. மூவேந்தரைப் பற்றிய பாடல்களில் சேரர், பாண்டியர், சோழர் என்ற வரிசை மாறிய முறையில் முதல் பதினெட்டுப் பாடல்கள் உள்ளன. புவியியல் முறைப்படி இம்முறை வைப்பு சரியானதாகும். அரசர்க்கும் பிறர்க்கும் அறநிலையை எடுத்துக்கூறும் பாடல்களும், பாணாற்றுப்படை, விறலியாற்றுப்படை, புலவராற்றுப்படை முதலிய ஆற்றுப்படைச் செய்யுள்களும் இடையிடையே வந்துள்ளன. பெரும் பாலான இடங்களில் திணை, துறை முதலிய அமைப்பில் பாடல் களுக்கிடையே தொடர்பு காணப்படுகிறது. பாடல் யார் மீது யாரால் எப்பொழுது பாடப்பட்டது எனும் விளக்கமும் திணை துறைக் குறிப்புடன் பாடல் இறுதியில் அமைகிறது.

**நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின்** (புறம்-192)

**பெரியோரை வியத்தலு மிலமே**
**சிறியோரை இகழ்தல் அதனினு மிலமே** (புறம்-193)

**ஈயென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்**
**ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று**
**கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்**
**கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று** (புறம்-42)

என்பன போன்ற உயர்ந்த வாழ்வியல் உண்மைகளைப் புறநானூற்றின் வழி அறிந்து மகிழலாம்.

## அகமும் புறமும் கலந்த நூல்

### பரிபாடல்

பரிந்து செல்லும் ஓசையையுடைய பாக்களால் அமைந்த ஒரு வகைச் செய்யுளே பரிபாடலாகும். அதாவது வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நால்வகைப் பாக்களுக்கும், பலவகை அடிகளுக்கும் பரிந்து இடம் கொடுக்கும் பாட்டு என்று பொருள்படும்.

ஒவ்வொரு செய்யுளின் இறுதியிலும் இசை வகுத்தவர் இன்னா ரென்று குறிக்கப்பட்டுள்ளது. பரிபாடலுக்குச் சிற்றெல்லை 25 அடி களென்றும், பேரெல்லை 40 அடிகளென்றும் வரையறுத்துள்ளனர். 70 பாடல்களின் தொகுப்பாக அமைந்த பரிபாடல் நூலில் இன்று உள்ளவை 22 பாடல்களேயாகும். திருமால்மீது ஆறுபாக்களும் முருகன் மீது எட்டு பாக்களும், வையை ஆற்றின் மீது எட்டுப்பாக்களுமாகப் பாடப் பட்டுள்ளன. வையைப் பாடல்கள் மருதத்திணைப் பாடல்களாகும். கிடைத்திருக்கும் 22 பாடல்களில் முதற் பாடலையும் இறுதிப் பாடலை யும் பாடிய புலவர் பெயர் தெரியவில்லை. மீதமுள்ள 20 பாடல்கள் 13 புலவர்களால் பாடப்பெற்றவை.

ஆசிரியர் நல்லந்துவனார் பாடிய பாடல்கள் நான்கு. கடுவன் இள எயினனார் மூன்று பாடல்களையும், குன்றம் பூதனாரும், நல்லழுசியாரும் இரண்டிரண்டு பாடல்களையும் பாடியுள்ளனர். ஒவ்வொரு பாடலைப் பாடிய புலவர்களாக, இளம்பெருவழுதியார், கரும்பிள்ளைப் பூதனார், கீரந்தையார், கேசவனார், நப்பண்ணனார், நல்லச்சுதனார், நல்லெழுனியார், நல்வழுதியார், மையோடக் கோவனார் என்னும் புலவர் ஒன்பதின்மர் காணப்படுகின்றனர். இந்நூலுக்குப் பரிமேலழகர் உரை வகுத்துள்ளார்.

6

# பத்துப்பாட்டு நூல்கள்

சங்கப் பாடல்களைப் பதினெண்மேல்கணக்கு நூல்கள் என்றும் அதனையொட்டி எழுந்த பாடல்களைப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்றும் இரு பிரிவாக வகுத்தனர். தமிழ்ச்சான்றோர், புலவர் பலர் பாடிய பாக்களுள் குறுகிய அடிகளையுடைய பாடல்களைத் தனியாகவும், மிக நீண்டு வரும் பாடல்களைத் தனியாகவும் தொகுத்தனர். அவ்விதம் முதல் வகைப் பாடல்களை எட்டு நூல்களாகத் தொகுத்து எட்டுத்தொகை என்றும், இரண்டாம் வகை நீண்ட பாடல்கள் பத்தினைத் தேர்ந்து பத்துப் பாட்டென்றும் வழங்கினர். இப்பதினெட்டு நூல்களே பதினெண்மேல் கணக்கு நூல்களாம். இவற்றையே சங்க நூல்கள் என்று பாராட்டுவர்.

## பத்துப்பாட்டு நூல்கள்

திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் ஆகிய பத்தும் பத்துப்பாட்டு நூல்கள். இவற்றைக் கீழ்வரும் பாடலால் அறியலாம்.

**"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை**
**பெருகு வளமதுரைக் காஞ்சி – மருவினிய**
**கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்**
**பாலை கடாத் தொடும் பத்து"**

இப்பத்தினுள் ஆற்றுப்படையாக ஐந்து நூல்கள் அமைந்துள்ளன. அவை, முதல் நான்கும், பத்தாவதாக உள்ள மலைபடுகடாமும். இம் மலைபடுகடாத்திற்குக் கூத்தராற்றுப்படை என்ற பெயரும் இருப்பதால் இவ்வைந்து பாட்டுக்களையும் ஆற்றுப்படை நூல்களாக வழங்குவர். முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, நெடுநல்வாடை நான்கும் அகப்பொருள் சார்ந்தவை. மதுரைக் காஞ்சி நிலையாமையை வலியுறுத்தும் புறப்பாடலாகும்.

அ) ஆற்றுப்படை நூல்கள் (5)

- திருமுருகாற்றுப்படை
- பொருநராற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை
- பெரும்பாணாற்றுப்படை
- கூத்தராற்றுப்படை என்கிற மலைபடுகடாம்

ஆ) அகநூல்கள் (4)

- முல்லைப்பாட்டு
- குறிஞ்சிப்பாட்டு
- பட்டினப்பாலை
- நெடுநல்வாடை

இ) புறநூல் (1)

- மதுரைக் காஞ்சி

## (அ) ஆற்றுப்படை நூல்கள்

கலை வல்லாரும் புலவரும் மன்னனிடம் பரிசு பெற்றுத் திரும்பும் போது வழியில் காணும் தங்களை ஒத்தோரிடம் தாம் பெற்ற செல்வத்தைக் காட்டி 'இவ்வழியே சென்று இன்னோனை அடைவீராக' என ஆற்றுப்படுத்தி மகிழ்வர். கலைஞர்களின் இச்செயலால் தாம் பெற்ற இன்பம் பிறரும் பெற வேண்டும் என்னும் உயர்ந்த மனத்தை அறிகிறோம். வள்ளலை அடைய வழி சொல்லும் நிலையில் பாடல் இயற்றும் புலவனுக்கு அவ்வழிகளில் காணப்படும் இயற்கை எழிலையும் அங்கங்கே வாழும் திணை மக்களின் வாழ்க்கை முறை, விருந்தோம்பல் பண்பு, உணவு வகை ஆகியவற்றையும் விளக்க வாய்ப்புக் கிடைக்கிறது. மேலும் இவ்வாற்றுப்படை நூல்கள் பயண நூல்களைப் போலப் பயணத்தில் பயணி பெறும் அனுபவங்களைத் தெரிவிக்கும் விதத்தில் அமைந்துள்ள பாங்கினைக் கண்டு வியக்கலாம்.

மேலும் புலவர் தாம் பெரிதும் மதிக்கும் வள்ளல்களின் புகழை விரித்துச் சொல்ல ஆற்றுப்படையை ஓர் இலக்கிய உத்தியாகப் பயன்படுத்தினர் எனவும் அறியலாம். பத்துப்பாட்டில் பாண்டியருள் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும், சோழருள் கரிகால் பெருவளத்தானும், தொண்டைமான் இளந்திரையனும் புகழப்பட்டிருக்கின்றனர். ஓய்மாநாட்டு நல்லியக்கோடன், செங்கண்மாத்துவேள் நன்னன் என்னும் இரு குறுநில மன்னர்கள் முறையே சிறுபாணாற்றுப்

படை, மலைபடுகடாம் ஆகிய நூல்களால் சிறப்பிக்கப்பட்டுள்ளனர். இனி, பத்துப்பாட்டில் காணப்படும் செய்திகளையும் அதன் சிறப்பு களையும் குறித்துக் காண்போம்.

## திருமுருகாற்றுப்படை

பத்துப்பாட்டில் முதலாவதாகக் கூறப்படும் நூல் இது. இப்பாடலைப் பாடியவர் நக்கீரர். இப்பாட்டு பத்துப்பாட்டுக்குக் கடவுள் வாழ்த்துப் போல முதற்கண் அமைந்து சிறப்பினை அளிக்கின்றது. 317 அடிகளைக் கொண்ட இந்நூல் புலவராற்றுப்படை, முருகு என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகிறது.

முருகனிடம் ஆன்மீக அருள் பெறுவதற்கு வழிகாட்டியாக இந்நூல் அமைகிறது. ஏனைய ஆற்றுப்படை நூல்கள் பொருள் பெறச் செல்வோன் பெயரால் அமைய, இந்நூல் பொருள் தருவோன் பெயரால் அமைகின்றது. முருகனிடம் அருள்பெற்ற பக்தன் ஒருவன், முருகனிடம் அருள் பெறும் தகுதியுடைய மற்றவனை அவனிடம் ஆற்றுப்படுத்து வதாக அமைந்துள்ளது. முருகன் கோயில் கொண்டிருக்கும் அறுபடை வீடுகளைச் சிறப்பிக்கின்றது. திருப்பரங்குன்றத்தில் முருகனின் தோற்றப் பொலிவையும், திருச்சீரலைவாய் என்னும் திருச்செந்தூரில் ஆறுமுகமும் பன்னிருகையுமாக அடியவர்க்கு அருள் வழங்கும் திறமும் திருவாவி னன் குடியில் தேவர்களும் முனிவர்களும் முருகனைப் பரவுகின்ற முறையும் திருவேரகம் என்னும் சுவாமிமலையில் அந்தணர் களின் வாழ்க்கை முறையும் விளக்கம் பெறுகின்றன. ஆறாம் படை வீடாகிய பழமுதிர்ச்சோலையில் அடியவர்களின் தவநெறியும், முருகனின் அருளும் சிறப்பிக்கப்படுகின்றது.

இந்நூலில் காணப்படும் சிறப்புகள்

1. 'அதாஅன்று' என்னும் தனிச்சொல்லை இடையிடையே அமைத்திருப்பது அழகு ஊட்டுகிறது.
2. முருகக் கடவுளின் அவதாரம், அவனுக்குரிய மலர், கொடி, ஊர்திகள் பற்றியும் கிரவுஞ்ச மலையைப் பிளந்து சூரனைக் கொன்றது முதலான புராணச் செய்திகள் பற்றியும் முருகனை வழிபடும் முறைகள் குறித்தும் இந்நூல் விளக்குகிறது.
3. 'உலகம் உவப்ப' என மங்கலச் சொற்களோடு தொடங்கிப் 'பழமுதிர் சோலை மலைக்கிழவோனே' எனச் சிறப்பாக முடிவது சிந்திக்கத் தக்கது.

4. இந்நூல் முருகன் அருள் நோக்குடையதாகச் சிறந்திருப்பதால் பதினோராம் திருமுறையில் இணைக்கப்பட்ட பெருமைக் குரியது.

"சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்நசை வாய்ப்ப
இன்னே பெறுதி நீமுன்னிய வினையே" (62-66)

என்பது முருகனிடம் ஆற்றுப்படுத்தும் பகுதியாகும்.

## பொருநர் ஆற்றுப்படை

பறைகொட்டும் இசை வல்லார் பொருநர் எனப்பட்டனர். அவர்கள் ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர், பரணி பாடுவோர் எனப் பல பிரிவினர் ஆவர். இப்பாட்டில் வரும் பொருநன் போர்க்களம் பாடுவோன் ஆவான். பரிசில் பெற்று வரும் அவன், பரிசில் பெறக் கருதி வரும் மற்றொரு பொருநனைக் கரிகால் பெருவளத்தானிடம் ஆற்றுப் படுத்துகிறான். இந்நூலை இயற்றியவர் முடத்தாமக் கண்ணியார். முடம் என்பது உறுப்பைக் குறிப்பதால், உறுப்பால் பெற்ற பெயர் எனவும், பெண்பாற் புலவர் எனவும் கருதுவர். வஞ்சியடிகள் இடையில் வந்த ஆசிரியப்பாவால் ஆன இந்நூல் 248 அடிகளைக் கொண்டது.

"இருபெரு வேந்தரும் ஒரு களத்து அவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்தாள்
கண்ஆர் கண்ணி கரிகால் வளவன்" (146-148)

என்னும் அடிகள் கரிகாலன் வெண்ணிப் போரில் மற்ற தமிழரசர்களாகிய பாண்டியனையும், சேரனையும் வென்ற வெற்றிச் சிறப்பை எடுத்தியம்பு கின்றன.

"சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட்டு ஆக
காவிரி புரக்கும் நாடு..." (246-248)

என்னும் பாடல் அடிகளால் சோழநாட்டின் மண்வளமும் நீர்வளமும் போற்றப்படுகின்றன. பாலையாழின் வருணனை, விறலியின் கேசாதி

பாத (முடி முதல் அடிவரை) வருணனை, கரிகாலனின் வெற்றிச் சிறப்பு, கொடைச்சிறப்பு, மண்வளச் சிறப்பு ஆகியவை இந்நூலில் சிறப்பாக எடுத்தாளப்பட்டுள்ளன. மேலும், காவிரியாற்றின் மேன்மையை இந் நூலுள் பரக்கக் காணலாம்.

## சிறுபாணாற்றுப்படை

பாடும் கலைஞர் பாணர் எனப்பட்டனர். இசைப்பாணர், யாழ்ப் பாணர், மண்டைப்பாணர் எனப் பாணர் மூவகையினராவர். இப்பாட்டில் வரும் பாணன் யாழ்ப்பாணனாவான். இவன் தன் கையில் சிறிய யாழையுடையவன், அதனால் இவன் சிறுபாணன் எனப்பட்டான். அவ் வகையில் பரிசில் பெற்ற சிறுபாணன், எதிர்ப்பட்ட மற்றொரு பாணனை ஒய்மாநாட்டு நல்லியக் கோடனிடத்தே ஆற்றுப்படுத்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது. இந்நூலை இயற்றியவர் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் ஆவார்.

269 அடிகளைக் கொண்ட இப்பாடல், விறலியின் கேசாதிபாத வருணனை, மதுரை, வஞ்சி, உறந்தை ஆகிய மூவேந்தர்களின் தலைநகரப் பெருமைகள், ஏழு வள்ளல்களின் அருஞ்செயல்கள், செல்ல வேண்டிய வழியின் இயல்புகள், நாட்டின் நானில வருணனை, நல்லியக் கோடனின் வீரம் கொடை ஆகிய பல செய்திகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது.

குறுநில மன்னன் நல்லியக் கோடனின் மாளிகை வாயில் மேரு மலையின் ஒரு கண் திறந்தது போல் இருக்கும். அது அடையா வாயில். செல்பவர் பொருநராயினும், புலவராயினும், அந்தணராயினும் அவன் இனியனாக இருந்து வேண்டியது வழங்குவது அவன் பண்பு என மன்னனின் கொடைத் தன்மையும் பண்பு நலன்களும் இந்நூலில் விரித்துரைக்கப்படுகின்றன.

இதனை,

> **"பொருநர்க்கு ஆயினும் புலவர்க்கு ஆயினும்**
> **அருமறை நாவின் அந்தணர்க்கு ஆயினும்**
> **கடவுள் மால்வரை கண்விடுத் தன்ன**
> **அடையா வாயில் அவன் அருங் கடை"** (203-206)

என்பதால் அறியலாம்.

## பெரும்பாணாற்றுப்படை

பேரியாழை இசைப்பவன் பெரும்பாணன் எனப்படுவான். பெரும் பாணர், பெரிய இசைக்காரர் எனவும் அழைக்கப்படுவர். தொண்டைமான் இளந்திரையனைச் சிறப்பித்துக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடிய இப்பாட்டு 500 அடிகளைக் கொண்டதாகும். இதில் வரும் பாணன் கையில் உள்ளது பேரியாழ் என்பதாலோ அல்லது பாட்டின் அளவாலோ இந்நூல் இப்பெயர் பெற்றது என்பர். பாணாறு எனவும் வழங்கப்படும் இப்பாடல் ஆசிரியப்பாவால் ஆகியது.

பேரியாழின் வருணனை, இளந்திரையனின் செங்கோல் முறைமை, வணிகர் இயல்பு, மறவர், இடையர், உழவர், வலைஞர் முதலிய நானில மக்களின் வாழ்க்கை முறை அந்தணர் இல்லம், முனிவர் இருக்கை ஆகிய இவற்றின் இயல்புகள், பட்டினத்தில் அமைந்த கலங்கரை விளக்கம், காஞ்சி நகர்ச்சிறப்பு, திருவெஃகாவில் திருமால் பள்ளி கொண்ட காட்சி, இளந்திரையனுடைய வீரம், கொடை முதலியன இப்பாடலில் சிறப்பிக்கப்பட்டுள்ளன. பல்வகை இனத்தவரின் விருந்தோம்பும் பெருந்தன்மை செம்மையுறக் காட்டப்பட்டுள்ளது.

"பழுத்த மரத்தை தேடியலையும் பறவை போல் பசியால் வாடி அழும் சுற்றத்தாருடன் ஓடித்திரிந்து பொலிவிழந்து உடலையும் வாழ்வையும் வெறுத்துக் கூறும் வாயினை உடைய பாணனே" என்ற சொற்களால் பாணனின் வறுமை நிலையும் கொடுப்போரை நாடிச் செல்லும் தன்மையும் விளக்கப்படுகின்றன. இதனை

**"பழுமரம் தேரும் பறவை போல**
**கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்**
**புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண"** (19-21)

என்பதால் அறியலாம்.

## மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை)

மலைக்கு யானையை உவமித்து, அம்மலையில் பிறந்த பல்வேறு ஓசைகளைக் கடாம் (மதநீர்) எனச் சிறப்பித்ததனால் இப்பாட்டு மலைப் படுகடாம் எனப்பட்டது. கடாம் என்பது ஆகுபெயராய் அதனால் பிறந்த ஓசையை உணர்த்திற்று.

**"அலகைத் தவிர்த்த எண்அருந் திறத்த**
**மலைபடு கடாஅம் மாதிரத்து இயம்ப"** (347-348)

என இதனுள் வரும் "மலைபடுகடாஅம்" என்னும் தொடரின் பொருட் சிறப்பு நோக்கி இப்பாட்டின் பெயர் அமைந்தது.

இப்பாடலின் பாட்டுடைத் தலைவன் வேளிர் குடிப் பிறந்த நன்னன் சேய் நன்னன் ஆவான். பாடிய புலவர் இரணிய முட்டத்துப் பெருங் குன்றூரப் பெருங்கௌசிகனார் என்பவர் ஆவார். இப்பாடல் 583 அடிகளையுடையது ஆசிரியப்பாவாலாகியது.

நன்னனிடம் பரிசில் பெற்ற ஒருவன் எதிர்ப்பட்ட கூத்தன் ஒருவனை நன்னன் சேய் நன்னனிடம் ஆற்றுப்படுத்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது. கூத்தர் கொண்டு செல்லும் பல வகை இசைக்கருவிகள், யாழின் வருணனை, மலைவாழ் மக்களும் பிறரும் புதியராய் வருவோரை விருந்தோம்பும் முறை, நன்னனது ஊரின் பெருமை, அவனுடைய அரண்மனை வாயிலில் அவனைக் காண்பதற்காக வந்து நிற்பார் கொண்டு வந்த கையுறை வகை, அவர்கள் அவனைப் புகழும் முறை, நன்னனின் வள்ளல் தன்மை முதலிய பலவும் இப்பாடலில் விவரிக்கப்பட்டுள்ளன.

## (ஆ) அகநூல்கள்

### முல்லைப்பாட்டு

பத்துப்பாட்டில் சிறிய இப்பாட்டு 103 அடிகளால் ஆனது. இதனைப் பாடியவர் நப்பூதனார். கார்காலத் தொடக்கத்தில் திரும்பி வருவதாகச் சொல்லிப் பிரிந்த தலைவன் வரும்வரை தலைவி ஆற்றி இருக்கும் இயல்பு இப்பாட்டில் எழிலோவியமாகத் தீட்டப்பெற்றுள்ளது. பிரிவின்போது பெருமுது பெண்டிர் தலைவிக்கு ஆறுதல்கூற, அதனால் அவள் ஆற்றியிருந்ததும், தலைவன் போர்வினை முடித்து மீள வந்தமை கண்டு தோழி முதலியோர் தம்முள் கூறியதுமாக அமைந்தது இப்பாட்டு. பெருமுது பெண்டிர் விரிச்சி கேட்டுத் தலைவிக்கு ஆறுதல் கூறுதல், பாசறையின் தோற்றம், வீரர் தம் நிகழ்ச்சிகள், அரசன் சிந்தனையில் திளைத்தல், தலைவியின் பிரிவுத்துயரம், மன்னன் கார்காலத் தொடக்கத்தே வெற்றியுடன் மீண்டு வருதல் கார்காலக் காட்சிகள் ஆகிய செய்திகள் இப்பாடலில் இடம் பெற்றுச் சிறக்கின்றன.

சிறு கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று நின்ற இடத்திலேயே சுழலும் துன்பம் (தாய்ப்பசுவால் பிரிந்த துன்பம்) கண்டு இடைக்குலத்துப் பெண் 'இடையர் பின் நின்று செலுத்துவதால் உன் தாய்ப்பசு இப் பொழுதே வந்துவிடும்' என்று சொன்ன சொற்களைப் பெருமுது

பெண்கள் விரிச்சியாகக் கொண்டனர். தலைவன் வினை முடித்து வருவது உறுதியாதலின் கவலை நீங்குக எனத் தலைவியைத் தேற்றுகின்றனர். இது இப்பாட்டில் காட்டப்பெறும் அகக்காட்சி. பாசறையில் மன்னன் ஒரு கையைப் படுக்கையில் ஊன்றியும் மற்றொரு கையைத் தலையில் வைத்தும் நெடிது நினைந்து வருந்துகின்றான்.

"ஒரு கை பள்ளி ஒற்றி ஒருகை
முடியொடு கடகம் சேர்த்தி நெடிது நினைந்து" (75,76)

இது புறக்காட்சி. முல்லைப் பாட்டின் அமைப்பு திணை மரபுக்குள் நின்று கொண்டு அகத்தையும் புறத்தையும் எதிர்நிலைப்படவைக்கும் ஒரு முயற்சியேயாகும் என்பார் கார்த்திகேசு சிவத்தம்பி (சங்க இலக்கியம் ப.74) முல்லைப் பாட்டின் தலைவி நெஞ்சை ஆற்றி நிற்பதால் நெஞ்சாற்றுப்படை என்றும் முல்லைப்பாட்டுக்குப் பெயர் உண்டு.

## நெடுநல் வாடை

நெடிதாகிய நல்லதொரு வாடை என்பது இத்தொடரின் பொருள். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் பகைப்புலம் சென்று பாசறையிடத்து இருக்கிறான். அரண்மனையில் அரசி அவனை நினைந்து நினைந்து வருந்திக் கொண்டிருக்கிறாள். இப்படிப்பட்ட தலைவியைத் தலைவன் விரைவில் அடைவானாக என்று கொற்றவையைப் பரவுவதாக இப்பாட்டு அமைகிறது. பிரிந்து வாழும் அரசிக்கு இவ்வாடைக் காலம் நெடியதோர் வாடை ஆயிற்று. அரசன் போர் உணர்வுமிக இவ்வாடைக்காலம் மனவெழுச்சியை ஊக்குவதால் இது அவனுக்கு நல்லதோர் வாடை ஆயிற்று.

கூதிர் கால நிலை, மாலைக் காலத்தில் மகளிர் கடவுளை வணங்குதல், கூதிர் காலத்தின் விளைவுகள், அரண்மனை அமைப்பு, அங்கே அரசி தனித்துக் கட்டிலில் படுத்துப் பிரிவினால் வருந்தும் நிலை, சேடியர், செவிலியர் தேற்றவும் தணியாத பிரிவுத் துயரம், பாசறையில் தங்கிய அரசனுடைய நிலை ஆகியவற்றை இப்பாடல் கவினுறக் காட்டுகிறது.

இப்பாடலிலே அகத்திணை நிலையும் புறத்திணை நிலையும் எதிர் முரண்களாகச் சித்திரிக்கப்படுகின்றன. முதலில் அரண்மனையும், அரசியின் இருக்கையும் அரசி தேற்றுவிக்கப்படுவதும் ஒரு காட்சியாக அமைய, அதற்குரிய எதிர்காட்சியாகப் பாசறையில் அரசனின் நிலை எடுத்துக் கூறப்படுகிறது. அவ்வாறு கூறுவதுடன் பாடல் நிறைவுறுகிறது.

"சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே" (187-188)

இப்பாடல் 188 அடிகளையுடைய ஆசிரியப்பா. இதனைப் பாடியவர் நக்கீரர் இவரைத் திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரரினும் காலத்தால் முற்பட்டவர் என ஆய்வாளர் கருதுகின்றனர்.

## குறிஞ்சிப்பாட்டு

குறிஞ்சி என்பது புணர்தலும் புணர்தல் நிமித்தமுமாகிய காதல் ஒழுக்கமாகும். இப்பாட்டில் இயற்கைப் புணர்ச்சியும் பின்னர் நிகழும் புணர்ச்சிகளுக்குரிய நிமித்தங்களும் கூறப்படுதலின் குறிஞ்சிப்பாட்டு எனப் பெயர் பெற்றது. களவு காலத்து நிகழும் நிகழ்ச்சிகள் பெரும் பாலனவும் இதில் முறையே கூறப்பட்டுள்ளன. தலைவியின் காதலைத் தோழி செவிலித் தாயிடம் கூறும் வகையில் அறத்தொடு நிற்றல் என்னும் அகத்துறையில் 261 அடிகளால் அமைந்த பாடல் இது. தலைவி சுனை நீராடி விளையாட்டாகப் பல்வேறு பூக்களைப் பறித்துப் பாறையில் குவித்த நிகழ்ச்சியை விவரிக்கும் பகுதியில் 99 மலர்களின் பெயர்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. முப்பத்து நான்கு அடிகளில் 99 மலர்களின் பெயர்ப்பட்டியலைத் தந்து மகிழ்விக்கும் கபிலரை மிகச்சிறந்த இயற்கைப் புலவன் (Nature Poet) என அழைப்பது பொருத்தமுடையது.

தினைப்புனம் காத்தலும், சுனை நீராடலும், பூக்களைப் பறித்துப் பாறையில் குவித்தலும், தலைவன் வருகையும், களிறுதரு புணர்ச்சியும், இருவரும் ஒன்றுபட்டுப் பகல் விளையாடலும், மாலை வருகையும் தலைவன் தலைவியைப் பிரிதலும் ஆகிய களவின் கண் நிகழும் நிகழ்ச்சிகள் சுவைபட இப்பாடலில் கூறப்பட்டுள்ளன.

ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவித்ததற்குக் கபிலர் பாடியது இப்பாட்டு. இதில் வரும் தமிழ் அறிவித்தற்கு என்னும் தொடர் சிந்தனைக்குரியது. இறையனார் களவியல் உரை நூலின் பொருள் பற்றிக் கூறும் பொழுது. 'இது எந்நுதலிற்றோ எனில் தமிழ் நுதலிற்று' எனக் கூறும் கருத்தோடு இதனை ஒப்பு நோக்க வேண்டும். பொருளிலக்கணத்தை உடைய தமிழை ஆராயாதவர் களவொழுக்கத்தைக் கொள்ள மாட்டார் என்பது பரிபாடல்.

> **"தள்ளாப் பொருள் இயல்பின் தண்தமிழ் ஆய்வந்திலார்**
> **கொள்ளார் இக்குன்று பயன்"** (பரி. 9-25-26)

எனக்கூறுதல் ஒப்பு நோக்கத்தக்கது. இங்கே குன்று பயன் என்ற சொற்கள் களவொழுக்கத்தைக் குறிக்கின்றன. இப்பாடலில் தலைவிக்கும் செவிலிக்கும் இடையே நிற்கும் தோழி தனது நிலையை விவரிப்பதற்குக் கையாளும்

"இகல் மீக்கடவும் இருபெரு வேந்தர்
வினையிடை நின்ற சான்றோர் போல
இருபேர் அச்சமொடு யானும் ஆற்றுவேன்" (27-29)

என்ற உவமை வியந்து பாராட்டுதற்குரியது.

**பட்டினப்பாலை**

இப்பாட்டின் பாட்டுடைத் தலைவன் சோழன் கரிகாற் பெருவளத் தான். இதனைப் பாடியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். இது 201 அடிகள் கொண்டது. பெரும்பான்மையும் வஞ்சி அடிகளால் அமைவ தால் இது வஞ்சி நெடும்பாட்டு எனப் பெயர்பெறும்.

பொருள்தேடி வேற்று நாட்டிற்குச் செல்ல முற்பட்ட தலைவன் இடையில் கடக்க வேண்டிய கொடிய பாலை வழியை, வழியின் வெம்மையை எண்ணுகிறான். தலைவியை உடன் அழைத்துச் செல்லவும் முடியாமல் விட்டுப்போகவும் இயலாமல் தவிக்கிறான்.

ஒரு முடிவுக்கு வருகிறான். தன் நெஞ்சிடம் "காவிரிப்பூம் பட்டினத்தையே பரிசாகப் பெற்றாலும் திருமாவளவனின் செங்கோலினைப் போல, குளிர்ச்சி பொருந்திய தலைவியின் தோள்களைப் பிரிந்து, அவன் பகைவர் மேல் செலுத்தும் வேலைக் காட்டிலும் கொடிய வெய்ய கானத்தைக் கடந்து செல்லேன்" என்று கூறிச் செலவழுங்குகின்றான். இதனை,

"முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய,
வாரேன் வாழிய நெஞ்சே!
திருமா வளவன் தெவ்வர்க்கு ஓக்கிய
வேலினும் வெய்ய கானம், அவன்
கோலினும் தண்ணிய தடமென் தோளே!"

(218-220, 299-301)

என்பதால் அறியலாம்.

இப்பாடல் பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறிய பாலைத் திணை யாதலின் இப்பெயர் பெற்றது. இங்கே பட்டினம் என்பது சோழர் தலைநகரான காவிரிப்பூம்பட்டினமே. இந்நூலின் பெருமையை உணர்ந்தி பாட்டுடைத் தலைவன் கரிகாற் பெருவளத்தான் பதினாறு கோடிப் பொன்னை நூலாசிரியர் கடியலூர் உருத்திரங்கண்ணனாருக்குப் பரிசாக அளித்தான் என அறியப்படுகிறது. அக்கால வாணிக முறையை உணர்ந்து கொள்ள இந்நூல் பேருதவி புரிகின்றது.

## (இ) புறநூல்

### மதுரைக்காஞ்சி

பத்துப்பாட்டில் அதிகமான அடிகளைக் கொண்டது மதுரைக் காஞ்சி. வஞ்சியடிகள் விரவிய ஆசிரியப்பாட்டு 782 அடிகளைக் கொண்டது. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியனுக்கு நிலையாமையை அறிவுறுத்த மாங்குடி மருதனாரால் பாடப் பெற்றது இப்பாடல். மதுரை மன்னனுக்கு நிலையாமையை உணர்த்தும் காஞ்சித் திணையில் இப்பாடல் அமைந்ததால் மதுரைக்காஞ்சி என்னும் பெயர்பெற்றது.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் பற்பல போர்களில் பெற்ற வெற்றி இப்பாடலில் விரித்துரைக்கப் படுகிறது. பாண்டிய நாட்டில் மருதம், முல்லை, குறிஞ்சி, பாலை, நெய்தல் என்னும் ஐந்து நில வளங்களும், அந்நிலத்துப் பல்வகைக் காட்சிகளும் நிகழ்ச்சிகளும் சித்திரிக்கப்பட்டுள்ளன. மதுரை மாநகரின் அமைப்பு, மக்களின் வாழ்க்கை நிலை, நாகரிகச் சிறப்புகள், அந்நகரில் பகலிலும் இரவிலும் நிகழும் நிகழ்ச்சிகள், மதுரையின் மாண்பு ஆகியவை விவரிக்கப்பட்டுள்ளன. இறுதிப் பகுதியில் மன்னன், சிறந்த வீரர் முதலியோர்க்குப் பெருங்கொடை வழங்கும் கொடைத் தன்மை யைப் புகழ்ந்து அம்மன்னனை வாழ்த்துகின்றார் புலவர்.

**"கங்கையம் பேர்யாறு கடல்படர்ந் தாஅங்கு**
**அளந்துகடை அறியா வளம்கெழு தாரமொடு**
**புத்தேள் உலகம் கவினிக் காண்வர**
**மிக்குபுகழ் எய்திய பெரும்பெயர் மதுரை"** (696-699)

மதுரையின் வளம் இவ்வடிகளில் குறிக்கப்படுகிறது.

மாங்குடி மருதனாரிடம் அரசன் மிகவும் மதிப்பு வைத்திருந்தமையை 'மாங்குடி மருதன் தலைவனாக... புலவர் பாடாது வரைக என் நிலவரை' எனத் தன் வஞ்சினப் பாடலில் பாண்டியன் குறிப்பிட்டிருப்பதால் அறியலாம்.

இங்ஙனமாக இப்பத்துப்பாட்டும் தனித்தனி பொருள்களைக் கொண்ட வெவ்வேறான நூல்கள். இவை நீண்ட பெரும் அகவல்களாக இருப்பதால் இவற்றை ஒரு தொகுப்பாகப் பின்வந்தோர் கருதினர். களவியல் உரைகாரர் காலத்தே இக்கருத்து நிலவாமையின் அவர் பத்துப்பாட்டு பற்றி எதுவும் கூறவில்லை எனலாம்.

7

# சங்க இலக்கியத்தின் மாண்புகள்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழகம் 'தீஞ்சொற் கவிதையஞ் சோலை' யாகத் திகழ்ந்தது. இப்போது கிடைக்கும் சான்று களின்படி ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட புலவர்கள் ஆயிரக்கணக்கான பாடல்களை இயற்றினர் என அறிகிறோம். அவற்றை எல்லாம் பின்னாளில் வந்தவர்கள் ஒரு முறையாகத் தொகுத்து வைத்தனர். எட்டுத் தொகை என்றும் பத்துப்பாட்டு என்றும் அத்தொகுப்புக்குப் பெயரிட்டனர். இந்நூல்களையே இன்று சங்க இலக்கியம் என்கிறோம். இவை தோன்றிய சங்க காலத்தையே தமிழ் இலக்கிய வரலாற்றின் பொற்காலம் எனப் போற்றுகின்றோம்.

## 1. இயற்கை வழி இலக்கியங்கள்

பழந்தமிழ் நாட்டு மக்கள் வேற்று நாட்டாருடன் நெருங்கிய தொடர்பு கொள்வதற்கு முன்னமே தமிழிலக்கியம் தோன்றி வளரத் தொடங்கியது. அதனால் பிற மொழி இலக்கியத்தின் சார்போ, கலப்போ இல்லாமல் தமிழிலக்கியம் வளர்ந்தது. ஆதலின் தமிழ்நாட்டின் இயற்கை வளமும் பழந்தமிழரின் வாழ்க்கை நெறியுமே அந்தப் பழைய இலக்கியத்திற்கு அடிப்படையாக அமைந்தன. தமிழர்கள் இயற்கை யோடியைந்த இன்பவாழ்வு வாழ்ந்தனர். அத்தகைய வாழ்க்கைக்குத் தமிழகம் துணை நின்றது. இயற்கைச் சூழலில் வாழ்வு நடத்திய பழந் தமிழரின் கற்பனைக் கனவுகளும் இயற்கையோடு இயைந்தனவாகவே விளங்கின. அத்தகைய கனவுகள் பழந்தமிழரின் கலைச் செல்வமான சங்க இலக்கியத்தில் பதிவாகியிருப்பதை அறிய முடிகின்றது.

## 2. இலக்கியப் பகுப்புத்திறன்

சங்க இலக்கியத்தின் சிறப்பு அகம், புறம் என்ற பாகுபாடாகும். ஒத்த அன்பும் பண்பும் இளமையுமுடைய ஆண், பெண் இருவரின் காதல் வாழ்வு அகவாழ்வு எனப்படும். இவ்வாழ்வைப் பற்றிய பாட்டுக்

களெல்லாம் அகப்பாட்டுகள் எனப்படும். இவ்வகைப் பாடல்களில் காதலன், காதலி முதலானோர் பெயர்களைக் குறிக்கமாட்டார்கள். நாம் பாடும் பாட்டுக்கள் குறிக்கோள் இலக்கியமாக விளங்கி மக்களினத் திற்குப் பொதுவாகப் பயன்படவேண்டும் என்று புலவர்கள் விழைந்த தனாலேயே அவ்விதம் பாடினர். சங்க இலக்கியத்துக்கு வழிகாட்டியாக அமைந்த தொல்காப்பியமும்,

> "மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்
> சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்"

என்று விதியை வலியுறுத்துகிறது. காதலுக்கு இணையான உணர்வு வீர மாகும். இவ்வீர உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு பல போர் களைப் பற்றியும், போரில் வெற்றி கண்டவர்களைப் புகழ்வோருக்குப் பரிசில் தந்து மகிழ்விக்கும் வண்மையைப் பற்றியும், பிற அரசியல் தொடர்பான செய்திகளைப் பற்றியும் புலவர்கள் பாடினர். இதனைப் புறவாழ்வு என்று கொண்டனர். இவ்வாழ்வைப் பற்றிய பாட்டுக்களுக்கு புறப்பாட்டுக்கள் என்று பெயர் இட்டனர்.

## 3. இயற்கை வருணனைத் திறன்

அகப்பாட்டுக்களையும் புறப்பாட்டுக்களையும் நல்ல இலக்கிய மரபு அமைத்து அதனோடு பொருந்தும்படி பாடினர். "ஒவ்வொரு வகைக் காதல் ஒழுக்கமும் ஒவ்வொரு வகைப் போர்ச்செயலும் ஒவ்வொரு நிலப்பகுதிக்குச் சிறந்து விளங்குவதனை உணர்ந்து, வாழ்க்கைப் பகுதிகளுக்கும் நிலப்பகுதிகளுக்கும் தொடர்புபடுத்தி இலக்கிய மரபு ஏற்படுத்தினர்." நிலத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐவகையாகப் பாகுபடுத்தினர். அகப் புறவாழ்வுக்கு ஏற்பப் பல்வேறு திணைகளை வகுத்து ஒவ்வொரு நிலப்பகுதிக்கும் ஏற்ற அத்திணைகளைக் குறித்த பாடல்களை இயற்றினர். இதனை சர் ஜான் மார்ஷல் என்பார், 'இவ்வண்ணம் நிலத்தைப் பாகுபாடு செய்திருப்பது தமிழ் மக்களின் சிறந்த அறிவுக் கூர்மையைக் காட்டுவதாகும்' என்று வியந்து பாராட்டுவது இங்குக் காணத்தக்கது.

## 4. இலக்கிய மரபுத்திறன்

"அகப்பொருள் பற்றிய பாட்டுக்களில் உள்ள காதல் கற்பனைகள் வரையறுத்த இலக்கிய மரபையுடையன. இவற்றோடு இணைந்து அமைந்த இயற்கை வருணனைகள் செம்மை சான்றவை. இவற்றில் வரம்பு கடந்த கற்பனை இல்லை. ஒருவர் பாடியதைக் கண்மூடிப்

பின்பற்றிப் பாடிய வருணனைகளை இவற்றில் காண இயலாது. இயற்கையின் அழகைப் புலவர்கள் நேரே கண்டு உணர்ந்து அமைத்த சொல்லோவியங்கள் இவை; இவற்றில் உள்ள உவமைகள் புலவர்களின் நுண்ணிய நோக்கினையும் ஓவிய உணர்வினையும் புலப்படுத்த வல்லன.

## 5. உணர்ச்சியும் கற்பனைத் திறனும்

பாட்டில் உயிர்போல் விளங்க வேண்டியது உணர்ச்சி ஆகும். கற்பனை வளம் உடல் போன்று அமையும். ஒலி நயம் உடைபோல இடம் பெறும். "சங்கப் பாட்டுகளின் உடை, எளிமை சான்றது; உடல் அழகு அமைந்தது; உயிரோ போற்றத்தக்க விழுப்பம் உடையது. உயிரின் வாழ்வுக்காக உடலும், உடலின் காப்புக்காக உடையும் அமைதலாகிய இயற்கை அமைப்பை இப்பாட்டுக்களில் காணலாம்."

நற்றிணைத்தலைவன் ஒருவன் தலைவியை விட்டுப்பிரியக் கருதியுள்ளதாகத் தோழி அவளிடத்தில் வந்து கூறுகிறாள். அதற்கு மறுமொழியாக அத்தலைவி மொழிந்தது போல நற்றிணையில் ஒரு பாட்டு காணப்படுகின்றது.

"தலைவர் மாறாத சொல்லையுடையவர்; என்றும் நிலைத்து விளங்கும் இனிய பண்புகளை உடையவர்; எக்காலத்திலும் என்னை விட்டுப் பிரிந்து போகமாட்டார்; தாமரை மலரில் தாது ஊதி உயர்ந்த சந்தன மரத்தில் கட்டிய இனிய தேன்கூடு போல் உயர்ந்தவரின் உறவுகள் உயர்வு உடையனவாகும். நீர் இல்லாமல் உலகம் அமையாமை போல், அவர் இல்லாமல் நம் வாழ்வு அமையாது. ஆதலின் நம்மைக் கைவிடாமல் காப்பார். துன்பம் விளைவிக்க மாட்டார்; அவ்வாறு செய்தலையும் அறியார்" என்ற கருத்தமைந்த,

> **"நின்ற சொல்லர் நீடுதோன் றினியர்**
> **என்றும் என்தோள் பிரிபறி யலரே**
> **தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்**
> **சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்**
> **புரைய மன்ற புரையோர் கேண்மை**
> **நீரின் றமையா உலகம் போலத்**
> **தம்மின்று அமையா நந்நயந்து அருளி**
> **நறுநுதல் பசத்தல் அஞ்சிச்**
> **சிறுமை உறுபவோ செய்பறி யலரே"** (நற்றிணை.1)

என்ற பாடலில் மேற்கூறிய பண்புகளெல்லாம் சிறப்பாக அமைந்துள்ளன.

### 6. சமயச்சார்பின்மை

சங்ககால இலக்கியம் சமயச்சார்பில்லாமல் தோன்றியது தனிச் சிறப்பு. பாடல்களில் தெய்வங்கள் இடம்பெறினும் அவை பாடலின் பாடுபொருளாகவில்லை. திருமுருகாற்றுப்படையும், பரிபாடலுள் சில பாடல்களும் சமயச் சார்புடையனவேனும் அவற்றில் சமயக் கொள்கைகளும் தத்துவங்களும் பிற்காலச் சமய இலக்கியங்களைப் போல விளக்கம் பெறவில்லை.

### 7. வாழ்க்கை வெளிப்பாடு

"இலக்கியம் மனித வாழ்க்கையினின்றே மலர்வது. வாழ்க்கைக்கே உரியது. வாழ்க்கைக்காகவே அது நிலைபெற்றுள்ளது." என்பர் ஹட்சன் என்ற மேனாட்டுத் திறனாய்வாளர். ஒரு குறிப்பிட்ட கால மக்கள் வாழ்வை அப்படியே படம் பிடித்துக் காட்டுவது போலமைந்த சங்கப் பாடல்களைப் போல் பிற்காலத்தில் பாடல்களோ நூல்களோ தோன்றவில்லை. அன்றாட வாழ்வில் காணலாகும் ஒரு சின்னஞ்சிறு நிகழ்ச்சியைக் கூடச் சுவையாகச் சங்க இலக்கியம் கூறுவதைக் காணலாம்.

### 8. நாடகப் பாங்கு

சங்க இலக்கியத்தில் குறிப்பாக அகப்பாடல்களில் நாடகப் போக்கு காணப்படுகின்றது. இப்பாடல்களில் இடம் பெறும் நிகழ்ச்சிகளைப் புலவர் நேரே கூறுவது இல்லை. தலைவன், தலைவி, தோழி முதலியோருள் ஒருவர் மற்றொருவருக்குக் கூறுவது போலவே பாடல்கள் அமைந்துள்ளன. கலித்தொகையில் இருவர் மாறி மாறி உரையாடும் வகையில் அமைந்த நாடகப் பாடல்கள் உள்ளன.

### 9. உள்ளதை உள்ளவாறு கூறல்

வாழ்வில் எல்லாக் கூறுகளும் உண்மைநெறியில் வைத்துப் பேசப் பட்டன. சங்கப் புலவர்கள் தாம் நேராகக் கண்டவற்றையும், உள்ளத்தால் எண்ணித் துய்த்தவற்றையும் அப்படியே கூறினமையில் சங்க இலக்கியத்தில் இப்பண்பு சிறப்பாகக் காணப்படுகிறது. சிறுபாணாற்றுப் படையில் வரும் பாணனின் வறுமைநிலையை அழகாகப் படம் பிடித்துக் காட்டுவதை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

### 10. கருத்துப் பதிவு

"சிறந்த கருத்துகளின் பதிவே இலக்கியம்" என்பர் எமர்சன். வாழ்வைக் கூறும்போதெல்லாம் இடையிடையே அரிய கருத்துக்களை,

நீதிகளைப் புகுத்திச் செல்லும் சங்க இலக்கியம் கருத்துக் கருவூலமாகத் திகழ்கின்றது. கலித்தொகை, புறநானூறு போன்ற நூல்களில் அ... கருத்துக்களைக் காணலாம்.

## 11. வரலாற்றுக் களஞ்சியம்

"இலக்கியமும் வரலாறும் பிரிக்க முடியாத இரட்டைக் குழந்தைகள்" என்கிறார் ஜி.எம். திரிவேலியன். இக்கூற்றிற்கு ஏற்பச் சங்க இலக்கி... அமைந்துள்ளது. பதிற்றுப்பத்தும், புறநானூறும் முற்றும் வரலாற்றுக் கருவூலங்களாகத் திகழ்கின்றன அகவாழ்வைப் பற்றிக் கூறும் அகத் திணைப் பாடல்களில் கூட உவமை முதலிய வடிவங்களில் சங்கப் புலவர்கள் தமது வரலாற்றினைப் புலப்படுத்தியுள்ளனர். நந்தர்கள் கங்கையின் அடியில் செல்வத்தை மறைத்து வைத்த செய்தி அகநானூற்றில் கூறப் படுகிறது. சங்க இலக்கியம் இல்லையெனில் சங்ககால வரலாறே நமக்குத் தெரியாமல் மறைந்திருக்கும்.

## 12. உவமைக் களஞ்சியம்

உவமையணி எல்லாக் கால இலக்கியங்களிலும் காணப்பட்டாலும் சங்க இலக்கியத்திலேயே மிகவும் சிறந்து விளங்குகிறது. பிற்கால இலக்கியங்களில் வரும் உவமைகள் பலவும் சங்க இலக்கியத்துக்குக் கடன்பட்டவை என்று டாக்டர் மு. வரதராசனார் குறிப்பிடுகிறார். சங்க இலக்கியத்தில் பாடற் பொருளைச் சிறப்பிக்க வரும் உவமைகள் அனைத்துமே இயற்கையோடு இயைந்த கற்பனைகள். அறிவுக்குப் பொருந்தாத கற்பனைகளை இவ்வுமைகளில் காணமுடியாது.

செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே.

என்பது குறுந்தொகையில் வரும் உவமை. பாடலைப் பாடிய புலவர்க்கே பெயர் தந்த சிறப்பான உவமை இது.

## 13. உள்ளுறை உவமம்

இது உவமையில் ஒரு வகையாகும். கூறப்படும் உவமையில் புலவர் தாம் கூற நினைத்த கருத்தை மறைத்துக் கூறுவது உள்ளுறை உவமம் எனப்படும். சங்க இலக்கியத்தில் அகப்பாடல்களில் நிரம்ப இடம் பெறுகின்றது.

"கழிச்சேற்றில் ஓடும் குதிரைகள் தம்முடைய உடம்பில் பட்ட சேற்றினைக் கடல்நீரால் கழுவிக் கொள்ளும்" என்று கூறப்படுவதில் "களவொழுக்கத்தில் ஈடுபட்ட தலைவன் தலைவி இருவர் மீதேறிய

அலர் (ஊரார் கூறும் பழிச்சொல்) அவ்விருவரும் திருமணம் செய்து கொள்வதால் நீங்கப்பெறும் என்ற கருத்து உள்ளுறையாகப் பொதிந்துள்ளது."

## 14. புவியரசர் கவியரசர்

சங்க காலத்தை ஆண்டு வந்த மன்னர்களுள் சிலர் புலவர்களாக இருந்து பாடல்களைப் பாடியது தனிச்சிறப்பாகும். ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், பாண்டியன் அறிவுடை நம்பி, சோழன் நலங்கிள்ளி, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், சேரமான் கணைக்கால் இரும்பொறை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் பாடிய பாடல்கள் அவர்களுடைய உயர்ந்த குறிக்கோள், செம்மையான வாழ்வு ஆகியவற்றைக் காட்டுகின்றன. சோழன் நலங்கிள்ளி வஞ்சினம் கூறும்போது "யான் பகைவரை வெல்லாது தோல்வி அடைவேன் என்றால் என் மார்பில் கிடக்கும் மாலை பரத்தையரின் பொய்ம்மைப் புணர்ச்சியிடையே துவள்வதாக" என்கிறான். இது பண்டைக் காலத்தில் நாடாளும் வேந்தர் தனிமனித ஒழுக்கத்தை உயிரினும் மேலாகப் பேணிக்காத்ததைக் காட்டுகிறது.

## 15. பெண்பாற் புலவர்கள்

சங்க காலத்தில் ஆடவரேயன்றிப் பெண்டிரும் கல்வித்திறம் பெற்றுப் பாடல்கள் புனையும் அளவுக்குப் புலமை பெற்று விளங்கினர். ஔவையார், வெள்ளி வீதியார், நக்கண்ணையார், ஒக்கூர் மாசாத்தியார், ஆதிமந்தியார், பொன்முடியார் போன்ற 37 பெண்பாற் புலவர்கள் சங்க இலக்கியத்தில் 185 பாடல்களைப் புனைந்துள்ளனர். இவர்களுள் தலைசிறந்தவர் ஔவையார். புறநானூற்றில் அதிகப் பாடல்களைப் பாடியவர் இவர்தான். அதியமானுக்காகத் தொண்டைமானிடம் அரசியல் தூதுவராகச் சென்று இரு மன்னர்க்கும் இடையே நிகழவிருந்த போரைத் தடுத்து நிறுத்திய பெருமை உடையவர் ஔவையார்.

## 16. புலவர் மாண்பு

சங்க இலக்கியம் குறிப்பாகப் புறநானூறு சங்ககாலப் புலவர்களின் அஞ்சாநெஞ்சம் மான உணர்வு, பிறர்க்கென வாழும் பேருள்ளம் பெருமித வாழ்வு ஆகியவற்றைக் காட்டுகிறது. இப்படிப்பட்டவர்களுள் குறிப்பிடத்தக்கவர் கோவூர்கிழார். சோழர்குடியில் தோன்றிய நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் இடையே போர் மூண்டபோது, போர்முனையின் கண் சென்று அவ்விருவர்க்கும் அறிவுரை கூறிப்

போரைத் தடுத்து நிறுத்தினார். மலையமான் திருமுடிக்காரியை வென்று கொன்று, அவன் மீதுள்ள சினம் மாறாமல், அவனுடைய பச்சிளங் குழந்தைகளை யானையின் காலில் இட்டுக் கொல்ல முற்பட்ட கிள்ளிவளவனுக்கு அறிவுரை புகட்டி அக்குழந்தைகளைக் காத்தார். இளந்தத்தன் என்ற புலவரை நலங்கிள்ளியின் ஒற்றன் எனத் தவறாகக் கருதிச் சிறையில் அடைத்த நெடுங்கிள்ளிக்கு அறிவுரை கூறி அப் புலவரைச் சிறைவீடு செய்தார். இவை யாவும் கோவூர்க்கிழாரின் அஞ்சாமை, தமக்கென வாழாது பிறர்க்கென வாழும் பேருள்ளம் ஆகிய வற்றைக் காட்டுகின்றன. இது போலப் புலவர்களின் அரசியல், சமுதாய நலப்பணிகள் சங்ககாலத்தைத் தவிர வேறு எந்த ஒரு காலத்திலும் நடந்ததில்லை என அறுதியிட்டுக் கூறலாம்.

## 17. உயரிய நோக்கு

இன்று உலக அறிஞர்கள் கூறும் ஒன்றே உலகம் என்ற உயரிய கொள்கையை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் சங்க இலக்கியங்கள் முழங்கின.

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்"** (புறம்-192)

**"பெரிதே உலகம்; பேணுநர் பலரே"** (புறம்-207)

**"யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன்**
**சாந்துணையும் கல்லாத வாறு"** (குறள்-397)

என்ற பகுதிகளில் இக்கருத்து பதிவாகியிருப்பதை உணரலாம்.

சங்க இலக்கியங்களின் சிறப்பையும் மாண்பையும் நோக்கும் போது, சங்க காலம் இலக்கியத்தின் பொற்காலம் என்பது புலனாகிறது. இவ்விலக்கியங்கள் தோன்றி இரண்டாயிரம் ஆண்டுகள் ஆனாலும் புதுமைக்குப் புதுமையாயும், பழமைக்குப் பழமையாகவும் திகழ்ந்து தமிழ்மொழியின் சிறப்பையும் இலக்கிய வளத்தையும் இன்னும் தெரிவித்துக் கொண்டிருக்கின்றன.

8

# முத்தொள்ளாயிரம்

சேர, சோழ, பாண்டியர் ஒவ்வொருவர் மீதும் 900 பாடல்கள் வீதம் மொத்தம் 2700 பாடல்களைக் கொண்ட நூலென்று இதைக் கூறுவர். இந்நூலின் சிறப்புகளை உணர்ந்து முதன் முதலில் 1905ஆம் ஆண்டு செந்தமிழ் இதழின் வாயிலாக இரா. இராகவையங்கார் நூலின் பாடல் களை வெளியிட்டார். அதன்பின் 1938இல் முத்தொள்ளாயிரப் பாடல் களைத் தொகுத்துப் 'புறத்திரட்டு' என்ற பெயரில் வையாபுரிப்பிள்ளை வெளியிட்டார்.

உரையாசிரியர்கள் பலரும் ஆங்காங்கே முத்தொள்ளாயிரப் பாடல்களை எடுத்தாண்டுள்ளனர். ஆனால் ஒருவரும் 2700 பாடல் களைக் கொண்ட நூல் என்று குறிப்பிடவில்லை. இன்று ஏறத்தாழ 130 பாடல்களே நமக்குக் கிடைக்கின்றன. புறத்திரட்டு என்ற நூலின் முன்னுரையில் 2700 பாடல்களைக் கொண்டது இந்நூல் என கருத்துரைத்த வையாபுரிப்பிள்ளை நன்கு ஆய்ந்து தெளிந்த பிறகே முத்தொள்ளாயிரம் 900 பாடல்களே உள்ள நூல் என்றும் சேர, சோழ, பாண்டியர் ஒவ்வொருவரைப் பற்றியும் 300 பாடல்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளதாகவும் கூறுகிறார்.

டி.கே. சிதம்பரநாத முதலியார் தாம் பதிப்பித்த முத்தொள்ளாயிர உரைநூலில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சிறந்த புலவர் எழுதிய பாடல்கள் முத்தொள்ளாயிரம் எனக் குறிப்பிடுகிறார். அறிஞர்கள் பலரும் இந்நூலைச் சங்க காலத்தில் தோன்றியதாகவே கருதுகின்றனர். ஆனால் வையாபுரிப்பிள்ளை பிற்காலத்தில் வழக்கில் காணப்படும் சொற்கள், நூல் கருத்துக்கள் முத்தொள்ளாயிரப் பாடல்களில் இடம் பெற்றுள்ளதைக் கொண்டு இந்நூல் கி.பி.9ஆம் நூற்றாண்டில் தோன்றியதெனக் கருதுகிறார்.

நமக்குக் கிடைக்கும் முத்தொள்ளாயிரப் பாடல்களின் மூலம் பைந்தமிழ்நாட்டு மூவேந்தரின் படைச்சிறப்பையும், கொடைச்

சிறப்பையும், நகர்க்களிப்பையும், நாட்டுச் செழிப்பையும், போரையும், புகழையும் அறியமுடிகின்றது. இந்நூலின் பாடல்கள் பல்சுவையழகும், இலக்கிய நயமும் பெற்று விளங்குவதோடு சிறப்பான அறக்கருத்துக் களையும் எடுத்துச் சொல்கின்றன.

பாண்டியன் குருதிவேல் மாறனைப் பற்றி ஒரு பாடல், கொற்கைக்கு உரியவன், பகைவரைக் குத்திக் கொன்றதால் குருதி படிந்த வேலை வீரத்தின் அடையாளமாக ஏந்தி நிற்பவன், மார்பில் சந்தனம் கமழும் தன்மையை உடையவன், பெண்கள் விரும்பும் ஆண்மை, அறிவு, அழகு மூன்றும் ஒருங்கே அமையப்பெற்றவன். இத்தகு சிறப்பு பொருந்திய பாண்டியன்மீது ஒருத்திக்குக் காதல் மலர்கிறது. அவளுடைய எண்ண வானிலே அவன் உருவம் மின்னலாகத் தோன்றி மறைகிறது. இரவும் பகலும் அவனையே நினைத்துக் கண்ணீர் விடுகிறாள். இதனைக் கண்ட தோழி மற்றொரு பெண்ணிடம் பைந்தமிழ் வளர்த்த பாண்டியனின் கொற்கைத் துறையில் தான் முத்து விளையும் என்பர் ஆனால் அவனைக் காதலித்துக் கசிந்து உருகும் இவளுடைய கண்ணாகிய கடலிலும் முத்து விளைகின்றதே! எனக்கூறி வியப்படைந்து

**"இப்பீயின் றிட்ட எறிகதிர் நித்திலம்**
**கொற்கையே அல்ல படுவது - கொற்கைக்**
**குருதிவேல் மாறன் குளிர் சாந் தகலங்**
**கருதியார் கண்ணும் படும்''**

என்று கூறுவதாக அமைந்த பாடல் இலக்கிய நயம் செறிந்தது.

கிள்ளி வளவனின் யானை போர்க்களம் நோக்கிப் போகின்றது- கழுகுகளும், பருந்துகளும், நரிகளும் யானையைப் பின் தொடர்ந்து செல்கின்றன. களம் புகுந்த யானை எதிர்த்து வந்த வீரர்களை வீழ்த்து கிறது. பறவைக் கூட்டமும் விலங்குக் கூட்டமும் களத்தில் கிடக்கும் ஊனைத் தின்று ஆரவாரிக்கின்றன. அங்கு வந்த பேய் மகளிர் சிறந்த ஊனைத் தின்ற பெருமகிழ்ச்சியில் குடல் மாலையை அணிந்து கொண்டு துள்ளிக் குதிக்கின்றனர். இவ்வரிய போர்க்கள நிகழ்வை,

**"பாற்றின மார்ப்பப் பருந்து வழிப்படர**
**நாற்றிசையு மோடி நரிகதிப்ப- ஆற்ற**
**அலங்கலம் பேய் மகளி ராட வருமே**
**இலங்கிலை வேற் கிள்ளி களிறு"**

என்ற பாடல் தெரிவிப்பதை உணரலாம்.

கோதை என்னும் சேர மன்னன் வீதியில் உலா வருகின்றான். அவனைக் காணும் ஆர்வத்தில் பெண்கள் மாடங்களில் நிற்கின்றனர். தோழி ஒருத்தி தன் தலைவியை நோக்கி நீ சேரனைப் பார்த்தாயா? எனக் கேட்கின்றாள். அதற்குத் தலைவி, அவனைக் காண்பதற்காகக் கதவருகே சென்றேன் ஆனால் நாணம் வர விரைவாகக் கதவை அடைத்துக் கொண்டேன். செல்வரிடம் பொருள் கேட்கச் செல்லும் நாணமுடைய வறிஞர் எவ்வாறு போவதும் வருவதுமாக அலைவார்களோ அது போல என் நெஞ்சம் கதவைத்திறந்து அவனைப் பார்த்து விடவேண்டும் எனக் கதவருகே போவதும், நாணத்தால் திரும்பி வருவதுமாக அலைந்து கொண்டிருக்கிறது என்கிறாள், இந்நிகழ்ச்சியை

**"ஆய் மணிப் பைம்பூண் அலங்கு தார்க் கோதையைக்**
**காணிய சென்று கதவடைத்தேன் நாணிப்**
**பெருஞ்செல்வர் இல்லத்து நல் கூர்ந்தார் போல**
**வரும் செல்லும் பேருமென் நெஞ்சு"**

என்ற பாடல் எடுத்துக்காட்டுகிறது.

இவ்வாறு காதல் நிகழ்வுகளும், போர்க்கள வருணனைகளும் சிறப்பாக இடம் பெற்றுள்ள முத்தொள்ளாயிரப் பாடல்களைப் பாடியவர் யார் எனத் தெரியவில்லை. பேராசிரியர் இந்நூலாசிரியரைப் 'பிற்காலச் சான்றோர்' எனக் குறிப்பிடுகின்றார்.

மூவேந்தர்களின் சிறப்புப் பெயர்களைக் குறிக்காமல் அவர்களின் பொதுப் பெயர்களைச் சுட்டி சிறப்பித்துப் பாடியிருப்பது இந்நூலின் தனித்தன்மையாக விளங்குகிறது.